செய்தி வெளியீடு எண்: 691 நாள் : 22.12.2015

# <u>மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் சீரமைப்பு (22.12.2015 அன்றைய நிலவரம்)</u>

1. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களால் 17.12.2015 அன்று நடத்தப்பட்ட மாநில அளவிலான தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்கள் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட அறிவுரைகளின்படி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட ரூ.150 கோடியில் 38 நெடுஞ்சாலை கோட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய வெள்ள சேத சீரமைப்பு பணிகள் கண்டறியப்பட்டன.
2. மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், 150 பாலங்கள் / சிறுபாலங்கள் ரூ.13.00 கோடி மதிப்பில் சீரமைக்கப்படவுள்ளன. சாலை உடைப்புகள் ஏற்பட்ட 54 இடங்களில் ரூ.5.92 கோடிக்கு மதிப்பில் சீரமைப்பு பணிகள் செய்யப்படவுள்ளன.
3. நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ள 119 இடங்களில் தேவையான தடுப்பு சுவர்கள் அமைக்க ரூ.1.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
4. 2667 கி.மீ. நீள சாலைகளின் ஓடுதளங்களில் சேதமடைந்த பகுதிகளில் தார் கலவை கொண்டு சீரமைக்க ரூ.129.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
5. சாலைகளை சீரமைக்கும் பணிகளை 31.01.2015–க்கு முன்பாகவும், நீர்வழி பாதைகளில் 7 இடங்களில் தரைப் பாலங்கள் அமைக்கும் பணி 29.02.2016–க்கு முன்பாகவும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**